# நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

*செய்தி:* **தீர்க்கதரிசியாகிய எலிசா,**

அக்டோபர் 2, 1956, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

---

46. இப்பொழுது, கவனியுங்கள். அதன்பிறகு எலியா, இன்னுஞ் சரியாகச் சொன்னால், எலிசா, தான் திரும்பிச் சென்று, கலசத்திலிருந்த (cruse) கொஞ்சம் உப்பைக்கொண்டு, கசப்பான தண்ணீரை தித்திப்பாக ஆக்கினான். ஓ, அற்புதங்கள் அப்படியே எல்லாவிடங்களிலும் பறந்து கொண்டிருந்தன.

47. அதன்பிறகு அங்கே ஒரு... ஓ, அவனுக்கு ஒரு... இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், அவனுக்கு கோபமும் கூட இருந்தது. அவனுக்கு வழுக்கைத்தலை இருந்த காரணத்தினால், சில பிள்ளைகள் அவனைப் பார்த்து கேலி செய்தார்கள். உடனே அவன் அந்தப் பிள்ளைகளைச் சபித்தான், அது அதிகமாக பிள்ளைகளின் நிமித்தமாக அல்ல; தேவனுக்கு மரியாதை செலுத்தும்படியாக, தங்களுடைய பிள்ளைகளை வளர்க்காமல் இருந்த அந்தப் பெற்றோர்களின் நிமித்தமாக அது அவ்வாறு நடந்தது. அதுதான் அதுவாக இருந்தது. அந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இழந்தார்கள், ஏனென்றால் இரண்டு பெண்கரடிகள்

அந்தப் பிள்ளைகளில் நாற்பத்திரண்டு பேரைக் கொன்றுபோட்டது; நிச்சயமாக நூறு அல்லது அதற்கும் அதிகமான பிள்ளைகள் எலியாவுக்கும் பின்னால் ஓடி வந்திருப்பார்கள். அவன் சமாரியா வழியாகப் போய் கொண்டிருந்தான், அங்கே நீண்ட காலமாக வார்த்தையானது அவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டிருந்தது, மேலும் இந்தத் தீர்க்கதரிசி... ஆனால் அங்கே ஏதோவொன்றை நீங்கள் காண்கிறீர்களா? அது தேவனுடைய செய்தியாளனைப் பற்றிய ஜனங்களுடைய மனப்பான்மையாக இருக்கிறது.

48. இந்த உலகத்திலே எப்பொழுதாவது தேவனுடைய செய்தியாளன் மத சம்பந்தமான மனிதர்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது கிடையவே கிடையாது. அது எப்பொழுதாவது இருந்ததா என்று வார்த்தையில் எனக்குக் காட்டுங்கள் பார்க்கலாம். கிடையவே கிடையாது. பெயரளவிலான சபை, ஆதிகால துவக்கம் முதல் தொடங்கி, தேவனுடைய செய்தி ஒவ்வொரு முறையும் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது. இன்றும் அதற்கு எந்த குறைவான காரியத்தையும் அது செய்யும் என்று உங்களால் எதிர்பார்க்க முடியாது.

49. இயேசு வந்தபோது, அவர் புறக்கணிக்கப்பட்டார். அவர், “உங்களுடைய... எவன் ஒருவன், உங்களுடைய, அல்லது உங்கள் பிதாக்களில் எவன் தீர்க்கதரிசிகளை கல்லால் எறியாமல் இருந்தான்? எவன் தீர்க்கதரிசிகளைப் புறக்கணிக்காமல் இருந்தான்?” என்று கேட்டார்.

50. இப்பொழுது, இங்கே இந்தச் சிறு கதையைப் பாருங்கள். வரிகளுக்கு இடையே வாசியுங்கள் (எனக்கு அது பிடிக்கும், உங்களுக்கும் இல்லையா?), வரிகளுக்கு இடையில். ஏன், வெளியே போய்க் கொண்டிருந்த இந்தச் சிறு பிள்ளைகள், வழுக்கைத் தலையாக இருந்த இந்தப் பிரசங்கியாரைப் பார்த்து, கேலி செய்து கொண்டிருந்தன. **அவைகள் அவனைப் பார்த்து என்ன சொன்னார்கள் என்று பாருங்கள்: “வழுக்கைத் தலையா, எலியாவைப் போன்று நீ மேலே போகவில்லையா?” என்று அந்தப் பிள்ளைகள் கூறினர். எலியா மேலே போனான் என்று அவர்கள் நம்பவில்லை, அவர்கள் அதை சந்தேகித்தார்கள்.**

51. அவர்களுடைய ஆசாரியர்களும் அவர்களும் அவர்களிடம் கூறியிருந்தார்கள், அவர்கள் அநேகமாக, “ஓ, அவன் மேலே

போகவில்லை. அது கொஞ்சம் மதவெறித்தனம் தான். அவன் அபிஷேகம் பண்ணப்பட்ட அதே அபிஷேகத்தைக்கொண்டு இந்த ஆசாமி அபிஷேகம் பண்ணப்பட்டான் என்று எதிர்பார்ப்பதா. ஓ, அது முட்டாள்தனம். இவனையும் மேலே போகும்படி இவனிடம் சொல்லுங்கள்" என்று கூறியிருந்திருப்பார்கள்.

52. இதோ அந்தச் சிறு குழந்தைகள் போகிறார்கள். "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை வளர்த்து ஆளாக்கு." பெற்றோர்கள் அதை விசுவாசியாத காரணத்தினால், இதோ அந்தப் பிள்ளைகள் போகின்றன.

53. **நீங்கள், நீங்களே கூட போகாமல் இருந்துவிட்டு, உங்களுடைய பிள்ளைகள் ஞாயிறு பள்ளிக்கு போக வேண்டுமென்றும், கர்த்தரைச் சேவிக்க வேண்டுமென்றும் உங்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? நீங்கள் ஒன்றுமே இல்லாமல் இருக்கும்போது, உங்களுடைய பிள்ளைகள் ஏதோவொன்றாக இருக்கும்படி உங்களால் எப்படி எதிர்பார்க்க முடியும்?** அது சற்று மூர்க்கத்தனமாகவும் எந்த மரியாதையும் காண்பிக்காமல் இருப்பதாகவும் இருக்கிறது, ஆனால் நான் அதை அந்தவிதமாகக்

கூறும்படி கருதவில்லை; ஆனால் நான் அதைக் கூறும்படி, அவர் என்னைக் கொண்டிருந்தார், எனவே நான்... இது முன்கூட்டியே தியானிக்கப்பட்டதல்ல. சரி. ஆனால் அது... நீங்கள் ஒன்றுமில்லை என்று நான் கூறக்கருதவில்லை, ஆனால் நீங்கள் எந்த வேலையையும் செய்யாதிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்போது, அதைத் தான் நான் சொல்லவருகிறேன். **நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக, அப்படிப்பட்ட ஒரு மாதிரியை வைத்திருக்கும்போது, அவர்கள் நீதிமான்களாக இருக்கும்படி உங்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? உங்களால் எவ்வாறு அதைச் செய்ய முடியும்? அவர்களுக்கு இருக்கும் மிகச் சிறந்த மாதிரி நீங்கள்தான். அவர்கள்... அதைப் பார்க்கும்போது, அவர்கள் உங்களைத் தான் பார்க்கப் போகிறார்கள். வேறு யாரையும் அவர்கள் பார்க்க மாட்டார்கள், ஏனென்றால் உங்களுடைய சுபாவம் தான் அவர்களுக்குள் இருக்கிறது.**

54. சாத்தானைப் போன்று, மனிதர்களைக் குறித்து மிக அதிகமாக அவனுக்குத் தெரியும்.

அவன் தேவனிடம், யோபிடம் சொன்னான், அவன், “ஒரு மனிதன் தன்னுடைய தோலுக்காக என்னத்தைக் கொடுப்பான்?” என்று கூறினான். நிச்சயமாக. மனிதனுடைய சுபாவத்தைக் குறித்து அவன் ஏதோ அறிந்தவனாகத்தான் இருக்கிறான். அதை தாறுமாறாக்கி (தவறான வழியில் திருப்புவதற்கு) அவன் துணை செய்தான். அவனுக்குத் தெரியும்... அவன் அதில் ஒரு கையை வைத்திருந்தான். அதைக் குறித்து அதிகமாக அவனுக்குத் தெரியும்... எவ்வாறு என்று அவன் இன்னும் அறிந்திருக்கிறான். **ஜனங்களை விழப்பண்ண என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். மனிதனுடைய சுபாவத்தை அவன் அறிந்திருக்கிறான்.**

55. உங்களை அதினிமித்தமாக விழும்படி செய்ய உங்களுக்கு முன்பாக எதைக் காண்பிக்க வேண்டுமென்று... அவனுக்குத் தெரியும். விஸ்கி மதுபானத்தின் மணத்தை எவ்வளவு நன்றாக வைக்க வேண்டுமென்றும், ஒரு சிகரெட்டை (புகைக்கும்படி) வைக்க, எவ்வளவு ஆசைகளைத் தூண்டி, அதை அடையும்படி, விடாது ஏங்க வைக்க வேண்டுமென்றும், வாலிப பையனோ சிறு பெண்ணோ, தங்கள் டீன்ஏஜ் வயதில், பீர் மதுபானத்தை குடிக்கும்படியாக, அவர்களை இங்கு

வெளியே ஒரு-ஒரு இடத்தில் எப்படி நன்றாக வைப்பது என்றும் அவனுக்குத் தெரியும். ஒரு சில வருடங்கள் கழித்து, (அவர்கள்) அந்தப் பழைய பைத்தியம் பிடித்த கண்களை உடைய அருவருக்கத்தக்க தோற்றமுள்ள விகாரமான கிழவிகளாக இருக்கும் அந்தப் படத்தை பார்க்கும்படி (வைக்க) அவன் முயற்சிக்கவே மாட்டான். அது சரியே.

56. முழுமையாக நிர்வாணமாக இருக்கும் ஒரு பெண்ணின் படத்தை வைப்பதில் அவன் சாகசம் செய்ய மாட்டான், ஆனால் அவளைக் கவர்ச்சியானவளாக ஆக்கும்படி எவ்வளவு துணிகளை அவளை விட்டு எடுத்துப்போட வேண்டுமென்று அவனுக்குத் தெரியும். நிச்சயமாக அது அவனுக்குத் தெரியும்.

57. **அவனுக்கு மனிதனுடைய சுபாவம் தெரியும். உங்களை அதற்குள்ளாக எவ்வாறு பிடிப்பது என்றும் கூட அவனுக்குத் தெரியும். அவன் இரவும் பகலும் விழித்திருந்து, கெர்ச்சிக்கிற சிங்கம்போல், எவனை விழுங்கலாமோ என்று சுற்றித்திரிகிறான். நிச்சயமாக, அவன் அவ்வாறு தான் இருக்கிறான். எனவே அதை எவ்வாறு**

**செய்வது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது.**

58. ஆனால் தேவன் திரும்பிப் பார்த்தார், அவர் எலிசாவுக்குள் இருந்தார், அவன் (எலிசா) அந்தப் பிள்ளைகளை சபித்தான், உடனே காட்டிலிருந்து வெளியே ஓடிவந்த கரடிகளால், அவர்களில் 42 பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள், அந்தப் பிள்ளைகளில் 42 பேரை அவைகள் கொன்று போட்டன, ஏனென்றால் அவைகள் கீழ்ப்படியாதவைகளாக இருந்தன, **அந்தப் பிள்ளைகள் தவறான விதமான வீட்டில் வளர்க்கப்பட்டிருந்தன, தேவனுடைய தீர்க்கதரிசிக்கு மரியாதை செலுத்துவதற்குப் பதிலாக, தேவனுடைய தீர்க்கதரிசியை கேலி செய்யும்படி, அவைகளுக்கு தவறாகப் போதிக்கப்பட்டிருந்தது (கற்பிக்கப்பட்டிருந்தது).** நான் உங்களுக்குக் கூறுகிறேன், **நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்.** நீங்கள் கிறிஸ்துவுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்.

59. இப்பொழுது, யார் தேவனுடைய பெரிய ஊழியக்காரர்? இங்கே பூமியின் மேலுள்ள ஏதோவொரு மனிதன் அல்ல. அது பரிசுத்த ஆவியானவரே. அவரைத் தான் நீங்கள் பரிகாசம் பண்ணுகிறீர்கள். அவரைப் பார்த்து தான் ஜனங்கள் நகைத்து, “இப்பொழுது, அந்த ஜனங்களைப் பாருங்கள். அவர்கள் வேடிக்கையாக நடந்துகொள்ளவில்லையா? அவர்கள் கொஞ்சம் பைத்தியமாகத்தான் இருக்கிறார்கள் என்று நம்புகிறேன்” என்று கூறுகிறார்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, நீங்கள் தேவனைத்தான் பரிகாசம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அது சரியே. அப்போது நீங்கள் மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்வீர்கள் (unpardonable sin); அது இம்மையிலும் அல்லது மறுமையிலும் ஒருபோதும் மன்னிக்கப்படவே மன்னிக்கப்படாது. அதற்கு விரோதமாக நீங்கள் ஒரு வார்த்தை பேசினாலும், அது ஒருக்காலும் மன்னிக்கப்படாது என்று இயேசு கூறியிருக்கிறார்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★













